

£1.50P

# திருவில் தீ

tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

திருவில்

# தீ

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com


| | |
|---|---|
| வெளியீடு: | தமிழீழ மாவீரர் பணிமனை |
| முதற்பதிப்பு: | 05 - 10 - 1992 |
| அச்சுப்பதிப்பு: | புதுயுக அச்சகம், யாழ்ப்பாணம். |
| அட்டைப்படம்: | தயா |

அன்பளிப்பு: ரூபா. 50/-


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# திருவில் தீயினுள் தியாக தீபங்கள்

பலாலியில் பலியாகி திருவில்வெளியில் தீயுடன் கலந்து விட்ட பன்னிரு வேங்கைகளின் ஐந்தாம் ஆண்டு நினைவில் இந்நூலை வெளியிடுவதில் மனநிறைவடைகிறோம்.

இவ்வரலாற்றுத் தொகுப்பை வெளியிடவேண்டிய சந்தர்ப்பத்தை எமது பணிமனைக்குத் தந்த பெருமை எமது தலைமைத்துவத்துக்கே உரித்துடையதாகும்.

தமிழீழப் போராட்டத்தின் மூத்த தளபதிகளும் போராளிகளும் இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியால் கைதாகி கொழும்புக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது எதிரியின் கபட நாடகத்தை அம்பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தில், கொல்லும் சயனைட் வில்லையை மகிழ்வுடன் உண்டு தம் உடல்களை தாயக மண்ணிற்கு உரமாக்கினார்கள்.

இரு தளபதிகளும் மணமாகி மணமாலை வாடு முன்பு தாய், தாரம் இரண்டையும் விட உயிரிலும் மேலான தாயக விடுதலையையும் மக்களையும் - நேசித்தவர்கள்.

இந்நிகழ்வு தமிழீழப் போராட்டத்தின் முக்கியமான திருப்புமுனையாகும். அத்துடன் தமிழீழப் போராட்டத்திற்கு உத்வேகம் அளித்து புத்துயிர் பெறச் செய்தது.

இவர்கள் நடந்த பாதை மிகவும் கடினமானதும், நீண்டதுமாகும். இவற்றை குறுகிய கால இடைவெளியில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

பிரசுரிப்பது கடினம்; இருந்தும் இயன்றவரை எம்மால் சேகரிக்கக்கூடிய விபரங்களைக் கொண்டு இந்நூலை வெளியிடுகிறோம்.

இந்நூலுக்குத் தேவையான தகவல்களை, ஆலோசனைகளை வழங்கிய விடுதலைப் புலிகளின் அனைத்து உறுப்பினர்கட்கும், விரிவுரையாளர் திரு. பொன். பூலோகசிங்கம், இந்நூலின் முன் அட்டைப் படத்தினை வரைந்த ஓவியர் திரு. தயா, ஒரு சில நாளில் புத்தகத்தை அச்சிட உதவிய புதுயுக அச்சகத்தாருக்கும், அதன் உறுப்பினர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் பங்காற்றியவர்களுக்கும் எமது நன்றிகள்.

குறிப்பாக எமது பணிமனையின் முதலாவது வெளியீடாக இருப்பதால் பல கோணப்பட்ட விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம்.

நன்றி!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்".

கொக்குவில்,
தமிழீழம் 1992.

தமிழீழ மாவீரர் பணிமனை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# 29-07-1987 மாலை 6.15 மணி
# 05-10-1987 பிற்பகல் 5.05 மணி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுச் சக்கரம் மிக வேகமாகச் சுற்றிய காலப்பகுதி இதுவாகும். 29-07-1987 மாலை 6 15 மணிக்கு தமிழீழ தேசத்தில் இந்திய இராணுவத்தினரை ஏற்றி வந்த முதல் விமானம் தரையிறக்கப்பட்டது. 05-10-1987 பிற்பகல் 5.05 மணிக்கு பலாலி இராணுவ முகாமில் புலேந்திரன், குமரப்பா, அப்துல்லா, மிரேஷ் நளன், அன்பழகன், ஆனந்தக்குமார், றெஜினோல்ட், பழனி, கரன், தவக்குமார், ரகு, தமீம், கருணாகரன், தாஸ், செல்வா, சிவகுமார் ஆகிய 17 போராளிகள் சயனைற் உட்கொண்டனர். இவர்களில் முதல் 11 பேரும் உடனேயே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். ரகு ஆபத்தான நிலையிலிருந்து அடுத்தநாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட புலேந்திரன் மணமுடித்து இருமாதங்கள் தான் — குமரப்பா மணமுடித்து ஒரு மாதம் — கரன் இரு குழந்தைகளின் தந்தை. (உயிர் பிழைத்த ஏனைய ஐவரும் நீண்ட கால சித்திரவதையின் பின் விடுவிக்கப்பட்டனர்.)

இந்த இடைப்பட்ட காலத்தில் வரலாறு மிக வேகமாக ஓடியது. ஒவ்வொரு நாளும் திருப்பம் மிகுந்த நாட்களாகவே இருந்தது. குறிப்பாக இவர்கள் சயனைற் உட்கொண்ட தினத்தின் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு வரலாற்று நிகழ்வைப் பதிவு செய்தது. இப்பன்னிரு வேங்கைகளினதும் வீரச்சாவைத் தொடர்ந்து, ''இனி யுத்த நிறுத்தம் இல்லை'' என்ற செய்தியைப் பிரகடனப் படுத்தினார் தலைவர் பிரபாகரன். அவ்வாறான நிலைமை எழுந்ததற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கான காரணத்தை விளக்கும் சிறுநூலே இதுவாகும். தமது வாழ்வுரிமைக்காகப் போராடும் ஒரு தேசிய இனத்திற்கெதிராக, இந்திய — சிறீலங்கா அரசுகள் மேற்கொண்ட கூட்டுச் சதியினை அம்பலப்படுத்த இந்நூல் உதவும் என நம்புகிறோம்.

☐ ☐ ☐ ☐

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், 17-08-1987 அன்று இந்திய — சிறீலங்கா ஒப்பந்தத்தைப் பற்றிய கருத்தரங்கொன்று நடைபெற்றது. அக்கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். சம்பத்தரியார் கல்லூரி அதிபரான வண. பிதா. பிரான்சிஸ் யோசப் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''இந்த ஒப்பந்தம் மன அமைதிக்கான ஒப்பந்தமல்ல — மயான அமைதிக்கான ஒப்பந்தம்!''

—மிகப் பொருத்தமான வார்த்தைகள் இவை. ஏனெனில், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அத்தினத்தன்றே நெடுந்தீவுக் கடலில் தொழிலுக்குச் சென்ற ஹெனியூட் சாம்சன் (24 வயது), ப. துரை (19 வயது), செல்வரத்தினம் (30 வயது) ஆகிய மீனவர்கள் நயினாதீவு கடற்படை முகாமைச் சேர்ந்த சிறீலங்காக் கடற்படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்தன்றே 'எங்கள் கடல் எங்களுக்குச் சொந்தமில்லை என்ற செய்தி எமக்கு உரைக்கப்பட்டது

அதேபோல், மணலாறு — கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற, அந்த நிலத்தின் பூர்வீகக் குடிமக்களை சிறீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விரட்டினர். இந்த மக்கள் 1984ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் தமது மண்ணிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டவர்கள். இந்த ஒப்பந்தம் தமது தாய் மண்ணில் மீண்டும் சுதந்திரமாக வாழ வழி வகுக்கும் என்ற நம்பிக்கையுடன் சென்ற மக்களுக்கு 'அப்படியான பாதுகாப்பு எதனையும் இந்த ஒப்பந்தம் வழங்கவில்லை' என்ற செய்தி சிறீலங்காப் படையினரால் உணர்த்தப்பட்டது.

tamileelamarchive.com

**04-08-1987** அன்று சுதுமலையில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர். அன்று தான் தமிழீழ மக்கள் மத்தியில் முதன் முதலாக, பகிரங்கமாக உரையாற்றினார் தலைவர் பிரபாகரன்;

''ஈழத்தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்து வந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் இருந்து பெறறுக் கொள்வதில் இருந்து எமதுமக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத் தான் குறிக்கிறது.''

''தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கும் கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.''

''இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை!''

'' சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகு தூரத்திலில்லை!''

☐ ☐ ☐ ☐

05.08.1987 அன்று பகல் ஆயுதக் கையளிப்பு பற்றி உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு செவ்வியளித்தார் தலைவர் பிரபாகரன். இவர்களில் கொழும்பிலிருந்து வந்த பத்திரிகையாளர்கள் மாறி, மாறி ஒரே மாதிரியான கேள்விளைத் தான் கேட்டனர்: ''முழு ஆயுதத்தையுமே கொடுக்கப் போகிறீர்களா? '' - ''ஒரு ஆயுதத்தைக் கூட வைத்திருக்க மாட்டீர்களா? '' - ''எப்போது முழு ஆயுதங்களையும் கொடுத்து முடிப்பீர்கள்?''



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ் மக்களின் உரிமைகள், அவர்களது பாதுகாப்பு, பற்றி மறந்தும் கூட ஒரு கேள்வியைக் கேட்கவில்லை அவர்கள்.

அன்று பிற்பகல் பலாலி இராணுவ முகாமில் ஆயுத ஒப்படைப்பு நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து சகல தமிழ்ப் போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்குவதாக சிறீலங்கா அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சேபால ஆட்டிக்கல பிரகடனப்படுத்தினார். இந்திய இராணுவத்தினர் முன்னிலையில் நிகழ்ந்த இந்த ஆயுத ஒப்படைப்புப் பற்றிய செய்திகளைத் திரட்ட உலகத்தின் பல்வேறு பாகங்களிலுமிருந்து திரண்டு வந்திருந்தனர் செய்தியாளர்கள். ஆயுத ஒப்படைப்பு முடிந்ததும் அப்பகுதியைப் பார்வையிட்டனர்.

பிரமாண்டமான டாங்கிகள் - கனரக ஆயுதங்கள் - ஒரு யுத்த களத்திற்குப் புறப்படும் தோற்றம்!

அப்பத்திரிகையாளர்களில் ஒருவர் இந்திய அமைதிகாக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கட் சிங்கிடம் கேட்டார்:

" நீங்கள் அமைதிப்படை என்று சொல்கிறீர்கள்; சமாதானத்தைப் பேண வந்ததாகச் சொல்கிறீர்கள். இவ்வளவு பெரிய டாங்கிகள் - கனரக ஆயுதங்கள் உங்களுக்கு எதற்கு?''

அவரது கேள்விக்கான பதிலைக் காலம் மிக விரைவிலேயே தெரியப்படுத்தியது. அந்த டாங்கிகள் - கனரக ஆயுதங்கள் எவையுமே புலேந்திரன், குமரப்பா முதலான பன்னிரண்டு வேங்கைகளின் உயிர்களையும் மீட்டுத் தரவில்லை. ஏனெனில், அவை தமிழீழ மக்களை காக்கும் நோக்கத்துடன் வரவில்லை.

☐ ☐ ☐ ☐

ஆயுத ஒப்படைப்பு நிகழ்ந்ததுமே இந்திய - சிறீலங்கா அரசுகளின் கூட்டுச்சதி செயற்படத் தொடங்கியது. 10.08.1987 அன்று திருமலையில் காளிதாசன் செல்வகுமார் என்ற இளைஞர் ஈ.பீ.ஆர்.எல்.எவ் வினரால் அடித்துக் கொல்லப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்திருந்தவர் என்ற ஒரே காரணத்துக்காகவே இவர் கொல்லப்பட்டார்.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

26.08.1987 அன்று மன்னாரில் ஹில்மன் (அடம்பன்), அர்ச்சுனா (கள்ளிக்கட்டைக் காடு), ரஞ்சன் (பிச்சைக் குளம்) ஆகிய போராளிகள் புளொட் அமைப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்திய – சிறீலங்கா அரசுகளின் ஆசீர்வாதத்துடனும் ஆலோசனையுடனும் இயங்கிய இத்தேசவிரோதக் கும்பல்களினால் மொத்தம் 22பேர் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் செய்த குற்றம் இந்தத் தேசத்தின் விடுதலையை நேசித்ததே.

இதே வேளை திருமலை, வவுனியா மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மிகத் தீவிரமாக நடைபெற்றன. புனர்வாழ்வு என்ற முலாம் இதற்குப் பூசப்பட்டது. புலிகள் நிராயுதபாணிகளாக நடமாடுகையில், சிங்கள ஊர்காவற் படையினர் ஆயுதபாணிகளாக நடமாடினர்; தமிழ்மக்களின் உயிர்களைப் பறித்தனர். ஒரு பக்கம் தேசவிரோதிகளால் எமது போராளிகளும் ஆதரவாளர்களும் உயிரிழந்து கொண்டிருந்தனர்; மறுபக்கம் சிங்களப் பேரினவாதிகளால் எமது தாயக மண் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஒப்பந்தப்படி, சிறிலங்காச் சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் இருந்த இளைஞர்களின் விடுதலை, ஆமை வேகத்தில் நிகழ்ந்து— நத்தை வேகமாகி — இறுதியில் நின்றுவிட்டது.

அமைதியின் பெயரால் எமது மண்ணும் மக்களும் எமது போராளிகளின் உயிரும் பறிக்கப்படுவதைத் தடுக்கவும், இந்திய — சிறிலங்கா அரசுகளால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் சுயரூபத்தை உலகிற்குக் காட்டவும் திலீபன் இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீராகாரமுமின்றி சாகும்வரை உண்ணாவிரதமிருந்தான். அக் கோரிக்கை கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது — இந்திய அரசிடமிருந்து பதிலெதுவும் வரவில்லை. அதே வேளை இந்திய வானொலி இந்த உண்ணாவிரதத்தைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருந்தது.

ஏற்கனவே இந்தியப்படை எமது மண்ணில் கால் வைத்த போது, அப்படையினரை முகாமை விட்டு வெளியே வராதவாறு சாத்வீகப் போராட்டம் நடத்தினர் எமது மக்கள்; நாங்கள் புலிகளின் பக்கமே என்பதைத் தெளிவுற உணர்த்தினர். அந்த நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது— திலீபனின் உண்ணாவிரதத்துடன் மக்கள் திரண்டெழுந்தனர். எங்கும் எழுச்சி!– எழுச்சி!



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திலீபன் ஈகச்சாவெய்தினான். இந்திய வானொலியில் ஒரு கவலையுடன் தனது கடமையை முடித்துக்கொண்டது இந்திய அரசு திலீபனின் மறைவைத் தொடர்ந்து 'இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயத்தைப் பின்போட முடியாத சூழ்நிலை உருவானது இரு அரசுகளுக்கும். எனினதும், இந்நிலையை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால், ''இடைக்கால நிர்வாகத்தின் நிர்வாகியைத் தெரிவு செய்வது புலிகளின் விருப்பத்தின் பேரிலல்ல — தனது விருப்பத்தினைப் பொறுத்தது தான்'' என்று வாதிட்டார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

ஒரு நிர்வாகியை மாற்றுவதற்குக் கூட அதிகாரமில்லாத இடைக்கால நிர்வாக சபையை ஏற்றுப் பிரயோசனமில்லை என்பதால், இதை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதே சரியென்ற முடிவுக்கு வந்தனர் புலிகள். ஜே.ஆரின் முடிவிற்கு ஒத்துப் போகும்படி வற்புறுத்தியது இந்தியா. இந்நிலையில் தலைவர் பிரபாகரன் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை.

இதே வேளை, புலிகளின் பின்னால் மக்கள் அணிதிரள்வதன் மூலம் தனக்கு ஒரு நெருக்கடி உருவாகி வருவதை இந்திய அரசு உணர்ந்தது. இந்நிலை தொடர்ந்தால், புலிகளை அழிப்பதற்காகத் தரையிறக்கப்பட்ட டாங்கிகளும், கனரக ஆயுதங்களும் அந்த நோக்கத்தை நிறைவேற்றாமல் திரும்ப வேண்டியிருக்கும். ஆதலால், இப்போது தேவை போரைத் தொடங்குவதற்கான சந்தர்ப்பம் — அது மிக விரைவிலேயே கிடைத்தது.

03. 10. 1987 அன்று எமது கடற்பரப்பில் இப் பதினேழு போராளிகளும் சிறீலங்காக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தமிழகத்திலிருந்த எமது அலுவலக ஆவணங்களைப் படகில் ஏற்றி வரும் போதே கைதாகினர். கைதானவர்களில் ஒருவர் புலேந்திரன் என்று தெரிந்ததும், சிறீலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி துள்ளிக்குதித்தார். சிறீலங்கா வானொலி புலேந்திரனுக்குக் கொலைகாரப் பட்டம் சுமத்தி, இவ்வாறான ஒரு பயங்கரக் குற்றவாளியைக் கைது செய்துள்ளோம் என்று பெருமை பேசியது; ''இவர்கள் ஆயுதங்களுடன் காணப்பட்டதாலேயே இவர்களைக் கைது செய்யவேண்டியேற்பட்டது'' என்று நியாயமும் கூறியது.

இவர்கள் பலாலி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி, தலைவர் பிரபாகரன் இந்திய அரசிடம் தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்தார். இதுபற்றி 05 10.1987 ஈழமுரசு பின்வருமாறு செய்தி வெளியிட்டது;



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# "புலிகளின் தளபதிகள் கைது ஒப்பந்தத்துக்கு முரணானது"

## இந்திய அரசுக்கு பிரபாகரன் கண்டனம்

விடுதலைப் புலிகளின் தளபதிகள் இருவரையும் போராளிகள் பதினைந்து பேரையும் ஸ்ரீலங்கா கடற்படை கைதுசெய்து இராணுவம் தடுத்து வைத்திருப்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு முரணானசெயல் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் இந்திய மத்திய அரசுக்கு தமது கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை பருத்தித்துறையருகே கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் தளபதியான திரு. குமரப்பா, திரு. புலேந்திரன் மற்றும் 15 போராளிகளையும் ஸ்ரீலங்கா கடற்படை கைது செய்து இராணுவத்திடம் ஒப்படைத்ததற்கும், இராணுவம் முகாமில் அவர்களை விடுதலை செய்யாமல் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதற்கும் ஆட்சேபனை தெரிவித்தே திரு. பிரபாகரன் இந்திய மத்திய அரசுக்குத் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார். திரு. பிரபாகரனின் ஆட்சேபனையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஆயுதங்களைக் கையளித்த பின் எமக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகளைக் கைது செய்வதும், தடுத்து வைப்பதும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்துக்கு முற்றிலும் முரணானதாகும்.

எமது போராளிகள் இதுவரை எதுவித குற்றமும் இழைக்க வில்லை. குற்றமிழைக்காதவர்களை கைது செய்ய முடியுமா?

ஒரு மீனவதொளிலாழி தனது தொழிலைச் செய்ய கடலில் செல்ல உள்ள உரிமையைப் போன்றதான செயலைத்தவிர எமது போராளிகள் வேறு எதனைச் செய்தார்கள்?

நமது பிரதேசத்துக் கடலில் நாம் சுதந்திரமாகச் செல்லக் கூடாதா? எமது இந்தச் சுதந்திரம் பறிக்கப்படக்கூடிய ஒன்று என நாம் கருதவில்லை. வெளிநாடு செல்ல விமானத்தில்



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பறப்பது போன்றே கடலில் படகில் செல்வதற்கான உரிமையும் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

பொருட்களை எடுத்துவர அனுமதி கேட்டோம்

இது போன்றதே நடந்த சம்பவமாகும். இந்தியாவில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தை மூடிவிட்டு அங்கிருந்த தஸ்தாவேஜுகளையும் பிற ஆவணங்களையும் எடுத்து நம் பிரதேசத்துக்கு கொண்டுவர இந்திய கடற்படையிடம் பாதுகாப்பும், அனுமதியும் கேட்டோம். பலதடவை கேட்டோம். ஆனால் தரப்படவில்லை. எனினும் பொருட்களை எடுத்துவருவது பற்றி இந்திய அரசுக்கு அறிவித்திருந்தோம்.

இந்நிலையில் பொருட்களை இந்தியக் கரையில் எடுத்துவைத்து பின் அவைகளில் ஒரு பகுதியை வள்ளத்தில் கொண்டுவந்து நமது பிரதேசத்தில் இறக்கிவிட்டு மீண்டும் மீதிப்பொருட்களை எடுத்துவர வள்ளத்தில் சென்றபோதே 'கைது' சம்பவம் இடம்பெற்றது.

தளபதிகள் தற்பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கி வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. இதனையே தளபதிகள் இருவரும் கொண்டு வந்தனர். ஆனால் ஸ்ரீலங்கா அரசின் வானொலி, தொலைத்தொடர்புச் சாதனங்கள், ஆயுதங்களைக்கொண்டு வந்ததாகப் பிரசாரம் செய்கின்றன.

ஆயுதங்களை ஒப்படைத்த பின் எமது பாதுகாப்புக்களை இந்தியப்படையிடம் ஒப்படைத்தோம். எம்மை யாராவது கைதுசெய்வதைத் தடுக்கவேண்டியவர்கள் அவர்களே. எமக்கு பாதுகாப்பு வழங்கவேண்டியவர்களும் அவர்களே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. இவ்வாறு நிலைமை இருக்கும்போது ஸ்ரீலங்கா அரசு எம்மைக் கைதுசெய்யும் கட்டத்தில் இந்தியாவே எம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய கடமைப்பாட்டுக்குரியது. தவறின் அது ஆபத்துக்குரியதாகும்.''

தலைவர் பிரபாகரனது இந்த வேண்டுகோள் அலட்சியம் செய்யப்பட்டது; கைதானவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வது பற்றி இரு அரசுகளும் ஆராய்ந்தன. இந்த நிலைமை வரவேண்டுமென்று தானே இரு அரசுகளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்நிலையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தலைவர் பிரபாகரனால் ஒரு செய்தி அனுப்பப்பட்டது. இச் செய்தியினை திரு. கோ. மகேந்திரராசா இந்தியப்படையினரிடம் கொண்டு சென்றார். இந்தியப்படையினர் மூலமாக பிரதமர் ராஜீவ் காந்திக்கு இச்செய்தியை உடனே தெரியப்படுத்துமாறும், ஒரு மணித்தியாலத்தில் இதற்கான பதிலைத் தான் எதிர்பார்ப்பதாகவும் மகேந்திரராசாவிடம் தலைவர் பிரபாகரன் தெரிவித்திருந்தார். அவ்வாறே இச்செய்தி இந்தியப் பிரதமருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

ராஜீவ், அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவரான டிக்ஷிற்றுடன் ஆலோசித்தார் பின்னர், அவரது பதில் டிக்ஷிற் மூலமாக, திரு. மகேந்திரராசாவிடம் தெரிவிக்கப்பட்டது.

- "புலிகளுடனான போரில் கைதாகி, புலிகளின் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட வேண்டும்."
- "ஜே. ஆர் விரும்பியவாறு இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

என்பன உட்பட சில நிபந்தனைகள் அடங்கியிருந்தன.

இக்கடிதம் இந்தியப்படையினரிடம் கையளிக்கப்பட்ட சரியான நேரத்தைத் திரு. மகேந்திரராசா முன்னரே தலைவர் பிரபாகரனுக்குத் தொலைத்தொடர்புக் கருவி மூலம் தெரிவித்திருந்தார். அதி லிருந்து சரியாக ஒரு மணித்தியாலத்தில், திரு. மகேந்திரராசா முன்னிலையில் இருந்த தொலைத் தொடர்புக் கருவியில் தலைவர் பிரபாகரனின் குரல் ஒலித்தது.

இந்த மண்ணில் காலடியெடுத்து வைத்த நாளிலிருந்தே, பிரபாகரன் என்னென்ன உத்தர வுகளை இடுகிறார் என்பதை அவதானித்துக் கொண்டிருந்த இந்தியப்படையினர் உஷாரானார்கள்; தொலைத்தொடர்புக் கருவியில் ஒலிக்கப் போவதைக் கேட்பதற்காக தமது காதுகளைக் கூர்மை யாக்கினார்; எங்கும் நிசப்தம் நிலவியது.

"இந்தியப் பிரதமரின் பதில் என்ன?" என்று கேட்டார் பிரபாகரன், அதற்கு மகேந்திர ராசா, அவரது நிபந்னைகளைத் தெரிவித்தார். உடனே பிரபாகரன்,



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''பேரம் பேசுவது புலிகளுக்குப் பிடிக்காது.
உடனே புறப்பட்டு வா!''

என்றார். திரு. மகேந்திரராசா புறப்படத் தயாரானார்.

அப்போது இந்திய இராணுவ அதிகாரிகள் வியப்பில் ஆழ்ந்தனர். ஏனெனில், இந்திய இராணுவ பலத்தின் முன்னால் அடங்கி, ஒடுங்கி நிற்கும் சக்திகளைத் தான் இதுவரை அவர்கள் கண்டிருக்கிறார்கள். நேபாளம், பூட்டான், சிறீலங்கா நாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாம் அவர்களுக்கு நினைவில் வந்தன. எனவே, திரு. மகேந்திரராசா சொன்னதை நம்ப முடியாமல் வியப்பிலாழ்ந்தனர். மீண்டும் நிசப்தம்.

அப்போது தொலைத்தொடர்புக் கருவியில் பிரபாகரனின் குரல் மீண்டும் ஒலித்தது ''என்னவாம்?'' என்று கேட்டார் பிரபாகரன். ''உங்கள் செய்தியை நம்பமுடியாமலிருக்கின்றனர்.'' என்று பதில் சென்னார் மகேந்திரராசா. அதற்கு திரு. பிரபாகரன், ''நான் சொன்னதை மீண்டும் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு, ''பேரம் — பேசுவது — புலிகளுக்குப்—பிடிக்காது!'' என்று ஒவ்வொரு சொல்லாக அழுத்தம் திருத்தமாகச் சென்னார். இந்தியப்படையினர் அதிர்ச்சியுடன் செயலற்று நின்றனர்.

'பேரம் — பேசுவது —புலிகளுக்குப் — பிடிக்காது' என்ற வார்த்தைகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உறுதித்தன்மையை உலகிற்கு எடுத்தியம்பியது.

'இது பேரங்களுக்கு மசியாது. எனவே இதை அழிப்பதைத் தவிர
வேறு வழியில்லை. இல்லையேல் இந்தியாவின் பிராந்திய நலனைப்
பேண முடியாது!'

என்ற முடிவுக்கு வந்தது இந்திய அரசு. அதன் முதற்கட்டப் பலியாக கைதான 17 விடுதலைப் புலிகளையும் தேர்ந்தெடுத்தது.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'தளபதிகள் இருவரும் அண்மையிலேயே திருமணமானவர்கள். எனவே, வாழ்வில் பற்றுக் கொண்டிருப்பார்கள். இவர்களிடம் இந்தியப் பிரதமரின் நிபந்தனைகளைக் கூறுவோம். இவர்கள் கைதிகளை விடுவிப்பதற்குச் சம்மதித்தால், அதனைப் பிரச்சாரப்படுத்துவோம்' எனக் கருதிய இந்திய இராணுவத்தினர் முதலில் புலேந்திரனை அணுகினர். பிரதமர் ராஜீவின் நிபந்தனைகளைத் தெரிவித்தனர்.

அதற்குப் புலேந்திரன்,

> "சிறீலங்கா இராணுவத்தினர் எம்மோடு யுத்தத்தில் ஈடுபட்ட வேளையில் யுத்த முனையில் யுத்தக் கைதிகளாகக் கைது செய்யப் பட்டவர்கள்; நாம் சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் கைது செய் யப்பட்டவர்கள். எனவே இவ்விரண்டையும் ஒப்பிட முடியாது. தமிழீழ இலட்சியத்திற்காகப் போராடும் எம்மை வைத்து இடைக் கால நிர்வாகசபை குறித்துப் பேரம் பேசுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது."

எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் — (ஈழமுரசு :- 06. 10. 1987)

இந்திய — சிறீலங்கா அரசுகள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டன.

□ □ □ □

## 05. 10. 1987

அன்று மிக விரைவாகச் சம்பவங்கள் நடந்தன. தென் பிராந்தியத் தளபதி திபேந்தர் சிங் பின்பு இந்தியத் தூதர் டிக்ஷிற் சிறீலங்கா ஜனாதிபதியுடன் பேசுவதாகவும், விரைவில் சுமுகமான முடிவு வரும் என்றும் தெரிவித்தார். ஆனால் பலனில்லை.

புலேந்திரன் தலைவருக்கான தனது இறுதிக் கடிதத்தை வரைந்தார்.

அதே போல் குமரப்பாவும் தனது இறுதிக் கடிதத்தை எழுதினார்.

ஏனைய போராளிகளும் கூட்டாகத் தமது இறுதிக்கடிதத்தை வரைந்தனர்.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மூன்று கடிதங்களின் சாராம்சமும் ஒன்று தான். தம்மைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்றால் தம்மைத் தாமே அழித்துக்கொள்ளப் போவதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

விடுதலைக்கான காலக்கெடு 7.00 மணியிலிருந்து 10.00 மணியாகியது. பின்பு, பிற்பகல் 2.00 மணியாகியது. 2.00 மணிக்கு கோ. மகேந்திரராசா அமைதிப்படையின் பொறுப்பதிகாரியான மேஜர் ஜெனரல் ஹர்கட் சிங்கிற்கு ஒரு செய்தியை அனுப்பினார்:

'' எமது இருதலைவர்களும் ஏனையோரும் எவ்வித குற்றங்களும் செய்யவில்லை. தென்னிந்தியாவிலிருந்த விடுதலைப் புலிகளின் காரியாலயத்திலிருந்து, புத்தகங்களையும், ஆவணங்களையும் இங்கு கொண்டு வருவதற்காகவே அவர்கள் படகில் சென்றார்கள். தளபதிகள் இருவரும் தமது பாதுகாப்புக்காக இரண்டு ரைபிள்களை வைத்திருந்தார்கள். இந்தியத் தூதுவருடனும் இந்தியப் பாதுகாப்புப்படை அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது, தற்பாதுகாப்புக்கான ஆயுதங்கள் வைத்திருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே, சிறீலங்காவின் ஆயுதப்படையினரால் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது சமாதான ஒப்பந்தத்துக்கும் பொது மன்னிப்புக்கும் ஏன் எமது பாதுகாப்புக்கும் இந்தியாவல் தரப்பட்ட உறுதிமொழிக்கும் எதிரானது. பலாலியில் இந்தியப் படைகள் பிரசன்னமாயிருக்க, சிறீலங்கா ஆயுதப்படை வீரர்களால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது வீரர்கள் பலவந்தமாக சிறீலங்கா ஆயுதப்படையினரால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டால் அவர்கள் ' சைனைற் ' அருந்தி தம்மைத் தாமே அழித்துக் கொள்வார்கள். அதனால் ஏற்படும் பயங்கர விளைவுகளுக்கு இந்திய பாதுகாப்புப் படையினரே பொறுப்பு. எமது வீராகள் இறக்க நேரிடின் நாம் யுத்த நிறுத்தத்தை பேணமாட்டோம். எனவே இவ்வேளையில் இந்திய அரசும் சமாதானப் படையினரும் எமது வீரர்களை உடனடியாக எவ்வித நிபந்தனையும் இன்றி விடுவித்து, சமாதானத்தையும், இனங்களுக்கிடையிலான நல்லுறவையும் வளர்க்க துணைபுரிய வேண்டும். ''

இச் செய்தி உடனே புதுடெல்லிக்குத் தெரியப்படுத்தப்பட்டது. 'புலிகள் சொல்வதைச் செய்பவர்கள், என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். திலீபனின் உண்ணாவிரதம் அதை நிரூபித்தது. ஆனாலும், தாங்கள் ஒரு வல்லரசு என்ற கிறக்கம் இந்தியாவிடம் இருந்தமையால் இவ்வெச்சரிக்கை அவர்களுக்கு விளையாட்டுத்தனமாக இருந்தது.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கும் நேரம் நெருங்கியது.

பிற்பகல் 5.05க்கு அவர்களை நாம் இழந்தோம். வீரச்சாவெய்தும் கடைசி மணித்துளி வரை அவர்கள் போராடினார்கள்.

சயனைற் உட்கொண்டவர்கள், உயிர் பிரிந்த பின்னர் கூடத் தாக்கப்பட்டார்கள். புலேந்திரன் உடலில் தெரிந்த காயங்கள் 'இன்னொரு வெலிக்கடையை' ஞாபகப்படுத்தியது. காயத்துடன் காணப்பட்ட சடலங்களில் ரகுவினதுடையதும் ஒன்று.

இது தொடர்பாக 07-10-1987 ஈழமுரசு பத்திரிகையில் தலைவர் பிரபாகரனின் செய்தி வெளியாகியிருந்தது:

"எமது முக்கிய தளபதிகளும், போராளிகளும் அநியாயமாக இறந்துபோக அனுமதிக்கப்பட்டதால் இந்திய அரசுமீது எமக்கிருந்த நம்பிக்கை இழந்து போய்விட்டது. சமாதான சூழலில் போர் நிறுத்த காலத்தில், அதுவும் இந்திய அமைதிப்படையினரின் கண்காணிப்பில், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட எமது போராளிகள் தம்மைத் தாமே அழித்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஈடிணை செய்யமுடியாத இந்தப் பேரிழப்புக்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டார். திரு. பிரபாகரன் மேலும் கூறியிருப்பதாவது:

**இந்திய அரசும் துணைபோகிறதா?**

''எமது இயக்கத்தின் திருகோணமலை மவட்டத் தளபதி புலேந்திரன், யாழ்ப்பாண மாவட்டத் தளபதி குமரப்பா ஆகியோரும் மற்றும் எமது பத்து சிரேஷ்ட உறுப்பினர்களும் நஞ்சருந்தி வீரத்தியாகம் செய்த இந்த மாபெரும் சோக நிகழ்ச்சியானது இன்று எமது மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. எமது இயக்கத் தலைவர்களை அழித்து விடுவதற்கு சிங்கள இனவாத அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவும் துணை போகிறதா என்று கூட எமது மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.''

'எனது இயக்கப் போராளிகளினதும், எமது மக்களினதும் பாதுகாப்பிற்கு இந்திய அரசு உத்தரவாதம் அளித்த காரணத்தினால் நாம் எமது ஆயுதங்களை ஒப்படைக்க முடிவெடுத்



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

தோம். ஆயுதங்களைக் கையளிக்கும்போது எமது பாதுகாப்பின் பொறுப்பையும் இந்தியாவிடம் கையளித்தோம் இதனையடுத்துச் சகபோராளிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. அடுத்ததாக, விடுதலைப் புலிகளின் பொறுப்பில் நிர்வாக ஆட்சிய திகாரம் கையளிக்கப்படுமெனவும் இந்திய அரசு உறுதியளித்துவந்தது. புலிகளைப் பெரும்பான்மை யாகக்கொண்ட நிர்வாக சபையையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்தார். இவ்வகை யில் விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை இந்திய- இலங்கை அரசுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

''இந்த சூழ்நிலையில்தான் எமது தளபதிகளும், போராளிகளும் எமது கடல் பிராந்தியத் தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களை இந்திய சமாதானப்படை பாதுகாப்பிற்காக பலாலி முகாமிற்கு அழைத்து வந்தது. சிங்கள ராணுவம் ஒருபுறமும் இந்திய சமாதானப்படைகள் மறுபுறமுமாகச் சுற்றி வளைத்த சூழ்நிலையில் எமது போராளிகள் தடுப் பில் வைக்கப்பட்டனர். 'அவர்களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாது. உடன் விடுதலை செய்யப் படுவார்கள். நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்றெல்லாம் இந்திய சமாதானப் படைத் தளபதிகள் எமக்கு உறுதிமொழி தந்துகொண்டிருந்தார்கள்.

இந்திய சமாதானப் படைகளின் பாதுகாப்பில் இருக்கும்வரை எமது தோழர்களுக்கு எவ் வித தீங்கும் நேராது என நம்பி நாம் காத்திருந்தோம். ஆனால் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் நிலைமை திடீரென மாறியது. கைதானவர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட இருக் கிறார்கள். எம்மால் தடுக்கமுடியாது என இந்திய சமாதானப்படை அறிவித்தது. அதேசமயம் இவர்களை விடுவிப்பது சம்பந்தமாக கொழும்பில் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் சொன்னார் கள். முதலில் தென்பிராந்திய இந்தியத் தளபதி திபேந்தர் சிங் பின்பு இந்தியத் தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதியுடன் பேசுவதாகவும் விரைவில் சுமூகமான முடிவு வருமென்றும் நம்பிக்கை அளித் தார்கள். 7மணிக்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு பின்பு 10 மணியாகி பிற்பகல் 2 மணியாகி இறுதியில் மாலை 5 மணியாக நிச்சயிக்கப்பட்டது.

டிக்ஸிற் ஜெயவர்த்தனா பேச்சு தோல்வியடைந்து விட்டதாக மாலை 4-45 மணியளவில் எமக்கு அறிவிக்கப்பட்டது. அடுத்து என்ன நடந்ததென்பது மக்கள் அறிவார்கள். நாங்கள் முயற்சித்தோம். ஜெயவர்த்தனா விட்டுக் கொடுக்கவில்லை என்ற ஒரு நொண்டிச்சாட்டை சொல்கிறது இந்திய அரசு.''



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''எமது போராளிகளை விடுவிக்கவேண்டுமென இந்திய அரசு ஜனாதிபதி ஜெயவர்த்தனா விடம் உறுதியாகச் சொல்லியிருந்தால் இந்த அநியாயமான சாவுகள் நிகழ்ந்தே இருக்காது. இந்த வகையில் எமது போராளிகளுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் பொறுப்பிலிருந்து இந்தியா தவறிவிட்டது. எமக்குப் பாதுகாப்பளிக்கும் அதிகாரமும், பொறுப்பும் தார்மீகக் கடமைப்பாடும் இந்தியாவுக்கு இல்லையென்றால் இந்திய சமாதானப் படைகள் இங்கிருப்பதில் அர்த்தமென்ன? ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் சிங்கள ராணுவத்திற்கும், சமூக விரோத இயக்கங்களுக்கும் பாதுகாப்பளித்து விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டத் துணைபோவதுதான் இந்திய சமாதானப்படைகளின் நோக்கமா? எமது தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் பாது காப்பு அளிப்பதற்குப் பதில் அவர்களைச் சிங்கள ராணுவத்திடம் ஒப்படைக்கத் துணைபோனது இந்திய சமாதானப் படையினர் எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றம். இந்த சூழ்நிலையில் தான் நாம் இனி யுத்த நிறுத்தத்தைப் பேணுவதில்லை என முடிவெடுத்தோம்

□ □ □

புலேந்திரன் கைதாவதற்குச் சில நாட்களிற்கு முன்னர் நடந்த சம்பவம் இது:

> 'எம்மிடம் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் என்ற ரீதியில், எமக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு" என்பதை உணர்த்தும் வகையில் தானும், மற்றும் சில போராளிக ளும் திருமலைக்குச் செல்வதற்குப் பாதுகாப்பளிக்கும்படி இந்தியப் படையினரிடம் கோரிக்கை விடுத்தார் புலேந்திரன். அவரது கோரிக் கைக்கு, ''நாளை, நாளை'' என்று தட்டிக்கழித்து வந்தனர் இந்தியப் படையினர். ஒரு கட்டத்தில் புலேந்திரன், இது பற்றி இந்திய இராணுவ அதிகாரியான மேஜர் பெரியசாமியிடம் வினாவினார்:

"இன்று திருகோணமலைக்குப் போகப் பாதுகாப்பு வழங்க முடியுமா?'' —புலேந்திரன்.

''இல்லை.'' — பெரியசாமி.

''சரி, எப்போது போகப் பாதுகாப்புத் தருவீர்கள்?'' - புலேந்திரன்

''இன்றும் இல்லை; இனி எப்போதும் இல்லை.'' — பெரியசாமி.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

— ஆம்! உயிரோடு இருக்கும் போது பாதுகாப்பளிக்க மறுத்தது போலவே சயனைற் உட்கொண்ட பின்னர், அவரது புகழுடலைத் திருமலைக்குக் கொண்டு போகக் கூடப் பாதுகாப் பளிக்கவில்லை இந்தியப்படையினர்.

☐ ☐ ☐ ☐

வல்வை — தீருவிலில், 07.10.1987 அன்று பன்னிரு வேங்கைகளினதும் புகழுடல்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு ஆயுதபாணியாக வந்து அஞ்சலி செலுத்தினார் தலைவர் பிரபாகரன்.

ஒப்பந்தம் உருவாகிய சில நாட்களில் தமிழகத்தைச் சேர்ந்த திரு. பழ. நெடுமாறன் அவர்களிடம் ''இந்நிலையில், தமிழீழக் கோரிக்கை பற்றி ஈழத்தமிழ் மக்களின் கருத்தென்ன?'' என்று கேட்டனர் பத்திரிகையாளர்கள். அதற்கு அவர்,

''அது அணைந்துவிடவில்லை — நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது; எப் போதும் பற்றிக் கொள்ளலாம்''

என்றார்.

ஆம், நீறு பறந்தது; நெருப்பு பற்றிக் கொண்டது.

தமது பிள்ளைகளுக்கான இறுதிக் கடன்களைச் செய்வதற்காக நாற்காலிகளில் வரிசையாக இருத்தப்பட்ட பன்னிரு வேங்கைகளினதும் பெற்றோர்களைப் பார்க்கையில் எமது மக்களின் வயிற்றில் பற்றியெரிந்த நெருப்பு — நான்கு அடி உயரமான சிதையில் பன்னிரண்டு மாவீரர் களையும் வரிசையாக அடுக்கி வைத்து மூட்டிய பெரு நெருப்பு — திரு. நெடுமாறனின் கூற்றை நிரூபித்தது.

10.10.1987 அன்று இந்தியப்படைகளுடனான போர் மூண்டது. ஒரு கட்டத்தில் ஒரு லட்சம் இந்தியப்படையினரின் மூச்சு எமது காற்றை அசுத்தப்படுத்தியது.

☐ ☐ ☐ ☐

இந்தியப் படையின் புகழ்பெற்ற படைப்பிரிவுகள் எல்லாம் இந்த மண்ணில் தமது பெருமையை இழந்தன. ''இனி எங்குமே இந்த மாதிரியான முடிவு எடுப்பதில்லை'' என்ற முடிவுக்கு வந்தது இந்திய அரசு.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''அமைதிப்படையில் பணியாற்றி உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்'' என்று உத்தரவு போடுமளவுக்கு இந்தப் போர் இந்தியாவின் தேசியப் பிரச்சினையாகியது.

முடிவாக அவமானகரமான முகத்துடன் இந்தியப்படை வெளியேறியது. 24 03.1990 அன்று திருகோணமலையில் இந்தியப்படையின் கடைசி அணி வெளியேறியது. இந்த மண்ணிலிருந்து வெளியேறிய கடைசி இந்தியப்படை வீரரான லெப். கேணல். ஹர்தேவ் லிதர் என்பவரிடம், ''நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்'' என்று கேட்டனர் பத்திரிகையாளர்கள்.

''இப்படியான துரதிர்ஷ்டமான நிகழ்வு இனி என்றுமே எனது தாய்நாட்டுக்கு நிகழக் கூடாது! குறைவான இழப்புடன் நிறைவான படிப்பினைகளைப் படித்துக் கொண்டு நாம் வெளியேறுகிறோம்!''

என்று கூறினார் அவர்.

□ □ □ □

எமது மண்ணில்,

''1155 இந்தியப்படையினர் உயிரிழந்துள்ளனர், மூவர் காணாமற் போயுள்ளனர், 2987 பேர் படுகாயமுற்றனர்.''

என்று அமைதிப்படையின் பொறுப்பதிகாரி, மேஜர். ஜெனரல் ஏ. எஸ். கல்கத் உத்தியோக பூர்வமாக ஒப்புக் கொண்டார்.

பலாலி முகாமில் சயனைற் உட்கொண்ட வேங்கைகளின் புகழுடல்களைப் பொறுப்பேற்ற போது, அப்புகழுடல்களில் (குறிப்பாகப் புலேந்திரனின் உடலில்) பாரிய காயங்களிருப்பதைக் கண்ட மகேந்திரராசா அங்கிருந்த அமைதிப்படை அதிகாரியிடம்,

''இதப் போல ரெண்டாயிம் Body தரத் தயாராயிருக்கிறம்''

என்று சொன்னார்

அமைதிப்படையுடனான போரில் ஆயிரக்கணக்கில் புலிகள் வீரச்சாவெய்தவில்லை; அந்தத் தொகையில் கணக்குக் காட்டப்பட்டது, இந்தியப்படையினரின் உடல்கள் தான்.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒப்பந்தம் செய்யப்பட்டபோது ''எல்லா தமிழ் இயக்கங்களும் இவ்வொப்பந்தத்தை ஆதரிக்கின்றன. எல்.ரீ.ரீ.ஈ. மட்டும் ஆதரிக்கவில்லை, அவர்கள் கூட ஒரு இரண்டாயிரம் பேர் தான்'' என்று கூறினார் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி. அதை இந்தியப் படையினருக்கு ஞாபகப்படுத்தும் விதத்திலும் இப் பன்னிரு வேங்கைகளைப் போலவே ஏனையவர்களும் தமது கொள்கையில் உறுதியாயிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தவுமே. ''இதப்போல ரெண்டாயிரம் Body தரத்தயாராயிருக்கிறம்'' என்று திரு. கோ. மகேந்திராசா கூறினார்.

புலிகளின் தொகையையும் ஆயுதப்பலத்தையும் தான் இந்தியப் பிரதமரால் கணக்கிட முடிந்ததே தவிர புலிகளின் மன உறுதியை கணக்கிட முடியாமற் போயிற்று.

□ □ □ □

தீருவில் நாயகர்களின் வீரச்சாவுச் சம்பவம், எமது தாயகத்தின் பாதுகாப்பிற்கான கடற்படையினை உருவாக்க வேண்டிய தேவையை விரைவுபடுத்தியது.

இப்போது கடலிலே கடற்புலிகள் எதிரியைச் சிதறடிக்கின்றனர். கடற்புலிகளின் வல்லமை பற்றி கொழும்புப் பத்திரிகையாளர்கள் பல கட்டுரைகள் மூலம் எடுத்துரைக்கின்றனர்.

சிறிலங்காப் படையினரின் கப்பல்கள் தகர்க்கப்படுகின்றன. தலையில் ஏறிக் குட்டிவிட்டு வருவது போல் எதிரியின் நிலைகளுக்குள் புகுந்து எதிரியின் பாரிய படனைக் கைப்பற்றி வந்துள்ளனர்......மேலும் 02-10-1992 அன்று கட்டைக்காட்டு சிறீலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உட்பட பல தாக்குதல்கள் கடற்புலிகளின் திறமையை உலகிற்கு எடுத்துரைக்கின்றன.

அவர்களது முகாமிலும் இத்தமிழீழத்தேசமெங்கும் கடற்புலிகளின் ஒலிப்பதிவு நாடாவின் இனிமையான ஒலி கேட்கிறது.


"முந்தி எங்கள் பரம்பரையின்
கடலம்மா..................."



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# லெப் கேணல் புலேந்திரன்



பெற்றோர்:- குணநாயகம்
சுந்தரம்மா

இயற்பெயர்:- தர்மராசா

முகவரி:- பாலையூற்று, திருமலை.

தோற்றம்:- 07-06-1961

கல்வி:- திருமலை இந்துக்கல்லூரி
க. பொ. த. (உயர்தரம்)

உடன்பிறப்பினர்:- வேதநாயகம், குகநாயகம்,
யோகநாயகி.

மனைவி:- சுபாசினி

மகன்:- தர்மசீலன்

போராளியாய்:- -01-1979

மாவீரனாக தாயக மண்ணில்:- 5-10-1987



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குறிப்பிடக் கூடிய தாக்குதல்கள்:-

- முதன் முதலாக சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலான யாழ். காங்கேசன்துறை வீதித் தாக்குதல். ( 15.10.1981 )
- சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல். ( 27.10.1982 )
- பருத்தித்துறையில் பொலிஸ் 'ஜீப்' மீதான தாக்குதல். (18.02.1983)
- சாவகச்சேரி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் முத்தையா மீதான தாக்குதல். (29.04.1983)
- கந்தர்மடம் தேர்தல்சாவடியில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல். (18.05.1983)
- திருநெல்வேலித் தாக்குதல். ( 23.07.1983 )
- பதவியா-புல்மோட்டை வீதி சிறீபுரச் சந்தியில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல் ( 18.12.1984 )
- அச்சுவேலி சிறீலங்கா இராணுவ முற்றுகைக்கு எதிராக நிகழ்ந்த தாக்குதல். ( 09.01.1985)
- கொக்கிளாய் சிறீலங்கா இராணுவமுகாம் தாக்குதல். ( 14 02 1985 )
- திருமலை - கிண்ணியா வீதியில் இராணுவத்தின் கவசவாகனம் மீதான தாக்குதல்.
- திருமலை - கிண்ணியா வீதியில் விமானப்படையினர் மீதான தாக்குதல்.
- முள்ளிப்பொத்தானை சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல்.
- பன்மதவாச்சி சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல்.

விசேடதகமை:- திருமலைமாவட்டத் தளபதியாக விளங்கியவர் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர்.



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# லெப். கேணல் குமரப்பா

*பெற்றோர்:-* பாலசுந்தரம்
சிவகாமலட்சுமி

*இயற்பெயர்:-* இரட்ணபாலன்

*முகவரி:-* "ரேவடி"
வல்வெட்டித்துறை

தோற்றம்:- 27-05-1957

*கல்வி:-* வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க
தமிழ் கலவன் பாடசாலை
வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி,
க. பொ. த. (உயர்தரம்)

*உடன்பிறப்பினர்:-* சிவபாலன், சிறிபாலன்,
பாலலட்சுமி, பாலசுந்தரி, கண்ணன்.

*மணவாழ்வில்:* 04 - 09 - 1987

*மனைவி:-* ரஜனி

போராளியாய்:- 1983

*மாவீரனாக தாயக மண்ணில்:-* 5-10-1987





tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:-

- பொலிகண்டியில் கடல் வழிமூலம் தரையிறங்கமுற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல் (05-08-1984)
- பருத்தித்துறை பொலீஸ் நிலையத் தாக்குதல். (10-09-1984)
- கொக்கிளாய் சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதல். (14-02 1985)
- யாழ். பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-04-1985)
- மன்னார் பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-05-1985)
- குச்சவெளி பொலீஸ் நிலையத்தாக்குதல் (01-06-1985)
- வாகரையில் சிறிலங்கா இராணுவத்தின் மீதான தாக்குதல் (18-08-1985)
- ஏறாவூர் பொலீஸ் நிலையத்தாக்குதல் (02-09-1985)
- மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதல் (05-07-198

விசேட தகமை:- மட்டக்களப்புத்தளபதியாக விளங்கியவர்.
யாழ். மாவட்டத்தளபதி.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# மேஜர் அப்துல்லா



பெற்றோர்:- கணபதிப்பிள்ளை
சரஸ்வதி

இயற்பெயர்:- நகுலகுமார்

முகவரி:- கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தோற்றம்:- 20-07-1963

கல்வி:- யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
க. பொ. த. (உயர்தரம்)

உடன்பிறப்பினர்:- ஜெயக்குமார், நளினகுமார்,
விஜயகுமார், தர்சினி,
புவனகுமார், சுபாசினி,
உதயகுமாரி.

போராளியாய்:- 28-10-1983

மாவீரனாக தாயகமண்ணில்:- 5-10-1987

குறிப்பிடக் கூடிய தாக்குதல்:-

கொக்கிளாய் இராணுவமுகாம் தாக்குதல் (14-02-1985)

குச்சவெளி சிறிலங்கா காவல் நிலையத் தாக்குதல் (01-6-1985)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கப்டன் கரன்

பெற்றோர்:- வைத்திலிங்கம்
மனோன்மணி

இயற்பெயர்:- மனோகரன்

முகவரி:- "இரட்ணவாசா" வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தோற்றம்:- 26-06-1953

கல்வி:- வவுனியா மகாவித்தியாலயம்,
அநுராதபுரம் விவசாயப் பயிற்சி நிலையம்

உடன்பிறப்பினர்:- ஜீவானந்தன்,
சொர்ணலிங்கம் (போராளி) சிறிதரன்,
வசீகரன் (மாவீரர் லெப். சித்தார்த்தன்)
உதயகுமார்.

மணவாழ்வில்:- 17-08-1980

மனைவி:- குகனேஸ்வரி

பிள்ளைகள்:- மனோரதி, ரவீந்திரன்

போராளியாய்:- 1984

மாவீரனாக தாயக மண்ணில்:- 5-10-1987

விசேட திறமை: சிறந்த படகோட்டி,
விசேட தகமை:- கடற்புறா படகுக்கு பொறுப்பாளர்.





tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கப்டன் பழனி

tamileelamarchive.com

பெற்றோர்:- பாலசுப்பிரமணியம்
புஸ்பகாந்தியம்மா

இயற்பெயர்:- யோகேந்திரராசா

முகவரி:- உதயசூரியன் வீதி,
வல்வெட்டித்துறை

தோற்றம்:- 22-05-1960

கல்வி:- வல்வை சிவகுரு வித்தியாசாலை,
வல்வை சிதம்பராக் கல்லூரி
க. பொ. த. (சாதாரண தரம்)

உடன்பிறப்பினர்:- பத்மாதேவி, ராதாதேவி,
மகேந்திரராசா, விஜயாதேவி,
வனிதாதேவி, சர்மிளாதேவி,
ரவீந்திரராசா, கோகிலாதேவி.

போராளியாய்:- -4-1984

மாவீரனாக தாயக மண்ணில்:- 5-10-1987

விசேட திறமை:- சிறந்த படகோட்டி.






தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# கப்டன் நளன்



பெற்றோர்:- கணபதிப்பிள்ளை
பகவதி

இயற்பெயர்:- குணேந்திரராசா

முகவரி:- ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை.

தோற்றம்:- 19-06-1955

கல்வி;- புற்றாளை மகாவித்தியாலயம்,
பருத்தித்துறை காட்லிக் கல்லூரி,
யாழ்/பல்கலைக் கழகம்.

உடன்பிறப்பினர்:- மங்கையர்க்கரசி, (இறந்துவிட்டார்)
அனந்தவரசி, திருவிற்கரசி,
நக்கீரன், திருச்செல்வம்.

போராளியாய்:- 18-4-1984

மாவீரனாக தாயக மண்ணில்:- 5-10-1987

விசேட திறமை:- தொலைத் தொடர்புக் கருவிகள்
இயக்குவதிலும், திருத்துவதிலும் வல்லவர்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கப்டன் மிரேஸ்

tamileelamarchive.com

*பெற்றோர்:-* துரைசாமி தவராசா
மகாலக்ஷ்மி தவராசா

*இயற்பெயர்:-* மோகனராசா

*முகவரி:-* ஆதிகோவிலடி
வல்வெட்டித்துறை

*தோற்றம்:-* 30-08-1963

*கல்வி:-* வல்வெட்டித்துறை
சிவகுரு வித்தியாசாலை
6ம் வகுப்பு

*உடன்பிறப்பினர்:-* ஜெயராணி
விஜயராணி (காலமாகிவிட்டார்)
மரகதம்
சௌந்தரராஜன்

*போராளியாய்:-* பெப்ரவரி 1985

*மாவீரனாக தாயக மண்ணில்:-* 5. 10. 1987

*விசேடதிறமைகள்:-* சிறந்த படகோட்டி
உதைபந்தாட்டத்தில் வல்லவர்.

பங்குபற்றிய தாக்குதல்கள்:- பூநகரி, பருத்தித்துறை, தொண்ட மானாறு, வல்வெட்டித்துறையில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல்கள்






தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கப்டன் ரகு

tamileelamarchive.com



*பெற்றோர்:-* இராசமாணிக்கம்
தங்கலக்ஷ்மி

*இயற்பெயர்:-* ரகுநாதன்

*முகவரி:-* பாலாவிக் குடியேற்றம், பொலிகண்டி
வல்வெட்டித்துறை

*தோற்றம்:-* 26-03-1961

*கல்வி:-* பொலிகண்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை. பாலாவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,
9ம்- வகுப்பு.

*உடன்பிறப்பினர்:-* ரதிகலாதேவி
ரஞ்சநாதன்
ரவிநாதன்
(மாவீரர் முகமது)
சந்திரமோகன்

*போராளியாய்:-* 1982

*மாவீரனாக தாயக மண்ணில்:-* 6-10-1987


*விசேட திறமை:-* சிறந்த படகோட்டி, தமிழீழத்தின் சகல பிராந்தியங்களிலும் விடுதலைப் பணியில் ஈடுபட்டவர்;

X

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# லெப். அன்பழகன்

tamileelamarchive.com



பெற்றோர்:- முத்துக்குமாரு தேசோபயானந்தம்
(காலமாகி விட்டார்)
புஸ்பகாந்தியம்மா தேசோபயானந்தம்

இயற்பெயர்:- உத்தமசிகாமணி

முகவரி:- சிவகுரு வித்தியாசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

தோற்றம்:- 13-05-1964

கல்வி:- வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை,
8 ஆம் வகுப்பு.

உடன்பிறப்பினர்:-

அமரசிகாமணி
தேவசிகாமணி
நடனசிகாமணி
புத்திரசிகாமணி
யோகசிகாமணி
கமலவேணியம்மா
கிருஸ்ணவேணியம்மா
விமலவேணியம்மா
வசந்தவேணியம்மா
நிலவேணியம்மா
சத்தியவேணியம்மா

போராளியாய்:- 11-09-1984

மாவீரனாக தாயக மண்ணில்:- 5-10-1987



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# லெப். தவக்குமார்



பெற்றோர்:- சோமசுந்தரம்
தங்கச்சிப்பிள்ளை

இயற்பெயர்:- பாக்கியராசா

முகவரி:- வெற்றிலைக்கேணி
முள்ளியான்

தோற்றம்:- 7. 4. 1965

கல்வி:- வெற்றிலைக்கேணி கனிஸ்ட வித்தியாலயம்
8 ம் வகுப்பு

உடன் பிறப்பினர்:-
நவரெட்ணம்
இளையதம்பி
சின்னராசா
கணேஸ்
ராசகிளி
குணசீலன்
அன்னபாக்கியம்
தங்கமலர்
சிவலிங்கம்
பரமேஸ்வரி

போராளியாய்:- 1984

மாவீரனாக தாயகமண்ணில்:- 5- 10- 1987



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 2ம் லெப். ஆனந்தகுமார்

tamileelamarchive.com



பெற்றோர்:- ஞானப்பிரகாசம்
செபமாலையம்மா

இயற்பெயர்:- பிரான்சிஸ் அலோசியஸ்

முகவரி:- மணல்காடு
குடத்தனை

தோற்றம்:- 11- 01- 1964

கல்வி:- மணல்காடு றோமன் கத்தோலிக்க
பாடசாலை,
6ம் வகுப்பு.

உடன்பிறப்பினர்:- பிரான்சிஸ் ஜெயசீலன்
மரியஜெனிட்டா
சத்தியசீலன்

போராளியாய்:- 17- 09- 1984

மாவீரனாக தாயகமண்ணில்:- 5- 10- 1987


குறிப்பிடக்கூடிய தாக்குதல்:-
மன்னார் கடற்படைத்தளம்மீதான தாக்குதல்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 2ம் லெப். றெஜினோல்ட்

tamileelamarchive.com



பெற்றோர்:- கபிரியேல் பர்ணாந்து
மேரியோசப் பர்ணாந்து

இயற்பெயர்:- மரியநாயகம்

முகவரி:- வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

தோற்றம்:- 25- 01- 1963

கல்வி:- வெற்றிலைக்கேணி
றோ. க. பாடசாலை
5 ம் வகுப்பு

உடன் பிறப்பினர்:- செபமாலை, இராசநாயகம், இராசேஸ்வரி, அன்ரனிதாஸ், மேரிஅஞ்சலினா, இருதயநாயகி, நந்தினி, குணவதி, ஜெயசீலன்

போராளியாய்:- **1984**

மாவீரனாக தாயக மண்ணில்:- 05-10-1987



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# லெப். கேணல் புலேந்திரனின் கடிதம்

கனம் தலைவர் அவர்கட்கு,

புலேந்திரன் ஆகிய நான் 3.10.87 அன்று அதிகாலை 4.30 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினரால், பருத்தித்துறை கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டேன். எம்மீது எவ்வித குற்றமும் காணப்படாமல் இருந்தும் கூட என்னைக் காங்கேசன்துறை இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று ஓர் சிறைக்கைதிபோல் நடத்தப்பட்டேன். பின்னர் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு இராணுவத்தினரின் பலத்த காவலுக்கிடையில் இந்திய அமைதிப்படையினரின் மேற்பார்வையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். மேலும் என்னை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விசாரணை என்ற பெயரில் அல்லது வேறு ஏதாவது காரணத்தை முன்வைத்தோ கொழும்பிற்கு கொண்டு செல்ல நேரிடலாம். இக்கட்டத்தில் இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கோ, கட்டளைகளுக்கோ நான் எந்நேரத்திலும் கட்டுப்படப்போவதில்லை; அச்சட்டதிட்டங்களை அங்கீகரிக்கவுமில்லை. இவற்றை மீறி என்னைக் கொழும்பிற்குக் கொண்டு செல்ல நேர்ந்தால் என்னையே நான் அழித்துக் கொள்ளத் தயங்கமாட்டேன். என ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

இங்ஙனம்
புலேந்திரன்
(ஒப்பம்)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# லெப். கேணல் குமரப்பாவின் கடிதம்

களம் தலைவர் அவர்களுக்கு,

குமரப்பா ஆகிய நான் 3. 10. 87 அன்று அதிகாலை 4. 30 மணியளவில் ஸ்ரீலங்கா கடற் படையால் பருத்தித்துறை கடலுக்கு மேலாக வைத்துக் கைது செய்யப்பட்டேன். பின்பு என்னை காங்கேசன்துறை முகாமுக்கு கொண்டு வந்து, அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுக்கு இந்திய அமைதிப்படையினரின் கண்காணிப்பிலும், இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பிலும் இருக்கிறேன்.

மேலும் என்னைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல நேரிடலாம். நான் இலங்கை அரசாங் கத்தின் சட்டங்களை அங்கீகரிக்கவில்லை. என்னைக் கொழும்பு கொண்டு செல்ல நேரும் பட் சத்தில் என்னை முழுமையாக அழித்துக் கொள்ள சித்தமாயுள்ளேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

இங்ஙனம்
குமரப்பா
(ஒப்பம்)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

# அப்துல்லா முதலான ஏனைய போராளிகளது கடிதம்

கனம் தலைவர் அவர்களுக்கு,

03-10-1987 அன்று அதிகாலை 4.30 மணியளவில் குமரப்பா, புலேந்திரன் ஆகியோருடன் நாம் பதினைந்துபேரும் வள்ளம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது பருத்தித்துறைக் கடலில் வைத்து சிறீலங்கா கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டு காங்கேசந்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். எதுவித குற்றமும் புரியாத எம்மை காங்கேசன்துறை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். பின்னர், இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் பலாலி இராணுவமுகாம் கொண்டுவரப்பட்டு இராணுவத்தினரின் பலத்த காவலின்கீழ் சிறைவைக்கப்பட்டுள்ளோம். மேலும், சூழ்நிலைகளை நோக்குமிடத்து எம்மை விசாரணை என்ற பெயரிலோ, அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்தை முன்வைத்தோ கொழும்புக்குக் கொண்டு போகக்கூடும். நாம் சிறீலங்கா அரசின் சட்டதிட்டங்களையோ, அல்லது கட்டளைகளையோ அங்கீகரிக்க மாட்டோம். ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம். எதுவித குற்றமும் புரியாத எம்மை சிறீலங்காப்படையினர் கொழும்புக்குக் கொண்டு செல்ல நேரிட்டால் எம்மை நாமே அழித்துக்கொள்ள தயங்க மாட்டோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

(கையொப்பமிட்டவர்கள்)

நளன், பழனி, கரன்; ரகு; மிரேஸ்; அப்துல்லா; குமார், தவக்குமார்; செல்வா, அன்பழகன்; ஆனந்தகுமார்; றெஜினோல்ட், கருணாநிதி; தாஸ், தமீம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் குழுவினால் வெளியிடப்பட்ட பிரசுரம்:- (7-10-1987)

# தியாக வரலாறு தொடர்கின்றது...

ஆயுதக் கையளிப்பின் போது இலங்கை ஜனாதிபதி அவர்களினால் போராளிகளுக்கு 'பொது மன்னிப்பு'' வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு கடிதம் இலங்கை, இந்திய அதிகாரிகள் முன்னிலையில் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது.

ஆனால் 03-10-1987 அன்று எமதியக்க திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர் லெப். கேணல் புலேந்திரன், யாழ். மாவட்டப் பொறுப்பாளர் லெப். கேணல். குமரப்பா ஆகியோருடன் மேலும் 15 விடுதலைப் புலிகள் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி பிராந்திய, மாவட்டப் பொறுப்பாளர்கள் கைத்துப்பாக்கிகள் வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பாரதத்திலிருந்து எமது முகாமை மூடிவிட்டு அங்குள்ள எமது முக்கியமான புத்தகங்களை எடுத்து வரவே எமது இயக்கப் போராளிகள் பாரதத்திற்குச் செல்ல இருந்தார்கள். முன்னர் இந்திய அமைதிப்படையின் அனுமதி கேட்டும், அவர்களின் பாதுகாப்பில் அழைத்துச் செல்லுமாறு கேட்டும் அவர்கள் தாமதித்தமையினால் பின்பு இந்திய அமைதிப்படையினரின் அனுமதியுடன் எமதியக்கப் போராளிகள் தமிழ் நாடு செல்ல முனைந்தார்கள். அப்போது தான் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்கள்.

சுதந்திரம் மனிதனுடைய பிறப்புரிமை. நாம் எமது மண்ணின், மக்களின் பூரண சுதந்திரத்திற்காகவே எம்மை பூரணமாக அர்ப்பணிக்கத் தயாராய் உள்ளோம். ஆனால் எமது கடற்பிராந்தியத்திலே நடமாடக் கூட முடியாத அளவிற்கு நாங்கள் அந்நியர்களா? உரிமை அற்றவர்களா----

சமாதான ஒப்பந்தம் அமுலாகி, இலங்கை ஜனாதிபதியால் ''பொது மன்னிப்பு'' வழங்கப்பட்ட நிலையில், இவர்களின் சமாதான காகித ஒப்பந்தம் எவ்வாறு செயல்ப்படுகிறது? பொது மன்னிப்பு வழங்கப்பட்ட நிலையில் எப்படி ஒரு தமிழனை இலங்கை அரச படைகள் கைது செய்யலாம்? காகித ஒப்பந்தங்கள் இப்படித்தானா?



tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட எமதியகத்தைச் சேர்ந்த 17 போராளிகளை யும் கொழும்பிற்கு கொண்டு செல்லப் போவதாக இலங்கை இராணுவத்தினர் கூறியபோது- அவ்வாறு நீங்கள் எம்மை கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டால் நாம் ''சயனைட்'' அருந் துவோம் எனக் கூறினார்கள் எமது புலிகள்.

ஆனால் நேற்று (05-10-1987) மாலை 5.05 மணியளவில் இலங்கை இராணுவ அதிகாரி கள் எமதியக்கத்தைச் சேர்ந்த போராளிகளையும் கொழும்புக்கு அழைத்துச் செல்ல முற்படு கையில் அவர்கள் ''சயனைட்'' அருந்தி உயிருடன் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்ற விடுத லைப் புலிகளின் மரபிற்கிணங்கத் தம்மைத்தாமே அழித்துக்கொண்டார்கள்.

அவர்களின் பெயர் விபரம்:

1. யாழ். மாவட்ட தளபதி லெப். கேணல் - குமரப்பா
2. திருகோணமலை மாவட்ட தளபதி லெப். கேணல் - புலேந்திரன்
3. மேஜர்:- அப்துல்லா
4. கப்டன்:- நளன்
5. கப்டன்:- மிரேஸ்
6. கப்டன்:- பழனி
7. கப்டன்:- ஹரன்
8. கப்டன்:- ரகு அப்பா
9. லெப்ட்டினன்ட:-அன்பழகன்
10. லெப்டினன்ட்:- தவக்குமார்
11. 2ம் லெப்டினன்ட் ஆனந்தக்குமார்
12. 2ம் லெப்டினன்ட் றெஜினோல்ட்

வீரமரணமடைந்த லெப். கேணல் குமரப்பா யாழ். பிராந்தியப் பொறுப்பாளர் ஆவார் லெப். கேணல் புலேந்திரன் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆவார். இந்த வீர வேங்கைகள் தமது இயக்க கொள்கைக்கு அமைய எதிரியிடம் உயிருடன் பிடிபடாது தம்மைத் தாமே அழித்து வீரமரணம் எய்தினார்கள். இவர்களில் ஐவர் இன்னும் சாவோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

" எமது இயக்க வீரர்கள் கொள்கைக்காக உயிரையும் கொடுப்பார்கள். " என்று தியாகி திலீபன் கூறியதை இந்த வீரவேங்கைகள் " சயனைட் " அருந்தி தம்மைத்தாமே அழித்து நிரு பித்து விட்டார்கள்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com

திலீபன் கூறியது போல் ''என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்'' என்ற பாரதியின் வார்த்தைகள் வெற்றி கண்டு எமது நாடு எமது கரங்களில் முழுமையாகக் கிடைக்கும் வரை இப்படியான சோகமான வீரவரலாறுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

தமிழ்த்தேசிய இனத்தின் பூரண விடியலுக்காக உறுதிமிக்க, இலட்சிய வேங்கைகளை நாம் இழந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அனைத்து மக்களும் விடுதலைப் போராட்டப் பாதையில் எம்மோடு உறுதியுடன் அடியெடுத்து வைக்குமாறு உரிமையுடன் வேண்டுகிறோம்.
தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்குவதுடன், எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது 'என்ற மரபிற்கிணங்க மகிழ்ச்சியுடன் மரணத்தை ஏற்ற வீரவேங்கைளுக்கு எமது வீரவணக்கத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துவதோடு அவர்களின் இலட்சியப்பாதையில் இறுதிவரை முன்னேறுவோமாக.

எமது இலட்சியப்பாதையில் அன்று மில்லரைப் பலி கொடுத்தோம். நேற்று தியாகி திலீபனை இழந்தோம். இன்று வரலாற்றில் நடைபெற முடியாத முறையில் ஒரே நேரத்தில் 12 வீரவேங்கைகளை சயனைட் அருந்திய மரணம் மூலம் இழந்து நிற்கின்றோம்.

தமிழீழத்தில் உறுதிமிக்க இலட்சியப் பாதையில் எமது தனித்தன்மை வாய்ந்த தியாக வரலாறு தொடர்கின்றது...

ஒரு கடல் தொடர்ந்து பொங்குகிறது!
ஒரு புயல் தொடர்ந்து அடிக்கிறது!
ஒரு எரிமலை தொடர்ந்து குமுறுகிறது!

வெல்க தமிழீழம்!
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

tamileelamarchive.com





பல்லிடையே குப்பி பதித்த அவ்வேளைதனில்
பார்வைகளால் நீங்கள் என்ன பகர்ந்திருப்பீர்
பாசமுகங்கள் தன்னை நேசமுடன் நினைத்தீரோ
பரிதவிக்கும் உம்மக்கள் உரிமைகளை நினைத்தீரோ
ஆரறிவார் உங்கள் ஆழ்மனத்து ஆசைகளை

(நன்றி: ஈழமுரசு)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive